


சென்னையில் நேற்று (12.12.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேரறிஞர் அண்ணா நினைவிடத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் முன்னிலையில், ”நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர் குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று (12.12.2023) நடைபெற்றது. இக்குழுக் கூட்டத்தில், குழுவின் உறுப்பினர் செயலர், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்திரமோகன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், குழு உறுப்பினர்கள் ஆர்.சுப்பிரமணியன், திருமதி ரூப்மதி, ஓவியர் மருது, கவிஞர் ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன், ஸ்தபதி செல்வநாதன் உட்பட பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மழைநீர் சிமெண்ட் வாய்க்கால் மூலம் குளங்களுக்கு செல்ல கால்வாய் அமைப்பு

# அமைச்சர் இ.பெரியசாமி நடவடிக்கை: விவசாயிகள் மகிழ்ச்சி!

## ரெட்டியார் சத்திரம் ஒன்றிய மக்கள் பாராட்டு!

திண்டுக்கல், டிச. 14- ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் நீர்; ஆதாரங்களை பாதுகாக்க குளங்களிலிருந்து வெளியேறும் மழைநீர் சிமெண்ட் வாய்க்கால் மூலம் அருகில் உள்ள குளங்களுக்கு செல்வதற்கு நீர்;வரத்து வாய்க்கால்களை பாதுகாக்கவும் சிமெண்ட் வாய்க்கால் அமைப்பதற்கு ஆய்வு செய்யவும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டிருப்பதால் ரெட்டியார்சத்திரம் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளில் கோனூர் குட்டத்துப்பட்டி, கசவனம்பட்டி, கரிசல்பட்டி, ஆகிய கிராம ஊராட்சிகளில் உள்ள குளங்கள் மற்றும் நீர்ஆதாரங்களுக்கு முறையான நீர்வரத்து வாய்க்கால் வசதி இல்லாததால் அப்பகுதியில் உள்ள விவசாயிகள் மானாவாரியாக மக்காச்சோளம், சுண்டல், பருத்தி ஆகியவற்றை மட்டும் பயிரிட்டு வருகின்றனர். சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியாமி ரெட்டியார்சத்திரத்தில் நீர்;வரத்து வாய்க்கால்கள் இல்லாத குளங்களுக்கு சிமெண்ட் வாய்க்கால்கள் அமைத்து கொடுத்து அதன் மூலம் அப்பகுதியில் உள்ள குளங்களுக்கு மழைநீர் செல்லும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

**சிமெண்ட் வாய்க்கால் அமைக்க ஆய்வு!**

கோனூர் ஊராட்சியில் உள்ள சங்கான் குளம் 49ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது மழை காலங்களில் குளங்களிலிருந்து வெளியேறும் தண்ணீர் வீணாகி வந்தது. சங்கான் குளத்திலிருந்து வெளியேறும் மழைநீர்; சிக்கையகவுன்டர் குளம், கோனூர் மந்தைகுளம், குடுமிநாயக்கன்குளம் மற்றும் அங்கிருந்து வெளியேறும் மழைநீர் குட்டத்துப்பட்டி ஊராட்சியில் உள்ள குளத்திற்கே செல்கிறது. மண்வாய்க்கால்களில் மழைநீர் செல்லும் போது பக்கவாட்டு கரைகள் இடிந்து விவசாய நிலங்களுக்கு மழைநீர் செல்லா வண்ணம் சிமெண்ட் வாய்க்கால் அமைப்பதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகிறது.

இதுபோல தருமத்துப்பட்டி ஊராட்சிபகுதியில் உள்ள கதிரயன்குளத்திலிருந்து கோனூர் சங்கான் குளத்திற்கு வரும் நீர்வரத்து வாய்க்கால்களையம் சீரமைக்க உத்தரவிட்டுள்ளார். அதற்கான ஆய்வு பணிகள் நடைபெற்று வருகிறது தங்களின் கோரிக்கை ஏற்று தங்கள் பகுதியில் உள்ள நீர் ஆதாரங்களை (குளங்கள்) பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வரும் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பாசன விவசாயிகள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர்.

**நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை!**

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள குளங்களுக்கு மழைநீர் செல்லும் வண்ணம் சிமெண்ட் வாய்க்கால்கள் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகையில் வரும் காலங்களில் நீர் ஆதாரம் பாதிக்கப்படும் என்பதால் இப்போதே நீர் ஆதாரங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மழைகாலம் முடிந்தவுடன் அனைத்து குளங்களையும் முறையாக தூர்வார நடவடிக்கை எடுப்பதோடு மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் அருகில் உள்ள குளங்களுக்கும், பாசன நிலங்களுக்கும் செல்லும் வண்ணம் சிமெண்ட் வாய்க்கால் அமைப்பதற்காக ஆய்வு பணிகள் நடைபெற்று வருகிறது பொதுமக்களுக்கு முறையான குடிதண்ணீரும், விவசாயிகளுக்கு பாசனத்திற்கு தண்ணீரும் வழங்குவதில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற உள்ளது என்றார்.

# ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக - தமிழ்நாடு அரசு கூடுதல் மனு!

புதுடெல்லி, டிச.14- தமிழ்நாடு அரசு சார்பில் அனுப்பப்பட்டுள்ள மசோதாக்களைக் கிடப்பில் வைத்திருக்கும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாட்டிற்கு எதிராகவும், கிடப்பில் வைத்திருக்கும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு உடனே உத்தரவிடக் கோரியும் உச்சநீதிமன்றத்தில் கடந்த அக்டோபர் 31 ஆம் தேதி அவசர வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே தமிழ்நாடு அரசு சார்பில் இரண்டாவது முறையாக 10 மசோதாக்களை சட்டமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களைக் கடந்த நவம்பர் 28 ஆம் தேதி ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருந்தார்.

இந்நிலையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கூடுதல் மனுத் தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில், “சட்டமன்றத்தில் நிறைவேற்றிய 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது சட்ட விரோதமானது. எனவே 10 மசோதாக்களுக்கும் ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிட வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

# கழக சட்டத்துறை சார்பில் இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

திருவாரூர், டிச. 14 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத் துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான 6வது மற்றும் இறுதி மண்டல பேச்சுப்போட்டி திருவாரூர் மாவட்டம் கலைஞர் கோட்டத்தில் உள்ள தயாளு அம்மாள் அரங்கத்தில் 09.12.2023 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் மற்றும் சு. ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் கே. ஜே.சரவணன், ப. கணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர் களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன் மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற மன்னார்குடி நீதிமன்ற வழக்கறிஞர் சந்தோஷ்குமாருக்கு ரூபாய் 50,000/, தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்;

இரண்டாம் பரிசு பெற்ற திருச்சி நீதிமன்ற வழக்கறிஞர் அமுதினியனுக்கு ரூபாய் 25,000/ வெள்ளிப் பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற திருச்சி நீதிமன்ற வழக்கறிஞர் கோகுலசாமிக்கு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்;

ஆறுதல் பரிசு பெற்ற திருச்சி நீதிமன்ற வழக்கறிஞர் விவேக்குக்கு, தஞ்சாவூர் நீதிமன்ற வழக்கறிஞர் அஜித்க்கு தலா ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம் மற்றும் சான்றிதழையும் திருவாரூர் மாவட்ட கழக செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே. கலைவாணன் வழங்கினார்.

இப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.



தேனி வடக்கு மாவட்டம் குச்சனூர் பேரூராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் உபயோக பயன்பாட்டிற்கு தொழிலதிபர் வீரமணியால் டிராக்டர் அன்பளிப்பாக வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் வழங்கப்பட்டது உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார், குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரவிச்சந்திரன், சின்னமனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன், கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மாவட்டம்

# கள்ளி மந்தையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு மையம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், டிச.14 - உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கள்ளிமந்தையம் ஊராட்சியில், இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியில் (சிஎஸ்ஆர்) இருந்து அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு மையத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிப்பதற்காக பாரத ஸ்டேட் வங்கி சார்பில் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியில் (சி.எஸ்.ஆர்.) இருந்து வழங்கிய ரூ.2.00 கோடி நிதியை பெற்றுக்கொண்டார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் ஊராட்சியில், இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியில் (சிஎஸ்ஆர்) இருந்து ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு மையத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நேற்று முன்தினம் (12.12.2023) திறந்து வைத்து, சிக்கமநாயக்கன் பட்டி ஊராட்சியில் நடைபெற்ற விழாவில், ஒட்டன் சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிப்பதற்காக பாரத ஸ்டேட் வங்கி சார்பில் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியில் (சிஎஸ்ஆர்) இருந்து வழங்கிய ரூ.2.00 கோடி நிதியை பெற்றுக்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தலைமை வகித்தார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் குடிநீர் திட்டப்பணிகளுக்கு ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த குடிநீர் திட்டப்பணிகள் அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவு பெற்று பயன்பாட்டிற்கு வரும்.

பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கள்ளிமந்தையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. 5 ரூபாய் காசு செலுத்தினால் 20 லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், சத்தியா நகர், நாகப்பன்பட்டி, விருப்பாச்சி, இடையக்கோட்டை, மார்க்கம்பட்டி, புலியூர்நத்தம், தங்கச்சியம்மாபட்டி, ஐ.வாடிப்பட்டி, கோடாங்கிப்பட்டி, சிந்தலப்பட்டி, கேதையறும்பு, அத்திக்கோம்பை, லெக்கையன் கோட்டை ஆகிய பகுதிகளில் குடிநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கும் பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. மேலும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளிலும் குடிநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

“மரத்தை வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும்“ என்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொன்மொழிக்கேற்ப தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மரங்களை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். தமிழகத்தில் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். வருங்கால சந்ததியினர் சுகாதாரமான காற்றை சுவாசிக்கவும், ஆரோக்கியமாக வாழவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இடையக்கோட்டை பகுதியில் 117 ஏக்கர் பரப்பளவில் 6.40 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு, ஓராண்டு நிறைவடைந்துள்ளது. இங்கு மரங்கள் நன்கு வளர்ந்துள்ளன. அதன் காரணமாக இடையக்கோட்டை பகுதியில் பருவமழை நன்றாக பெய்து வருகிறது. வேளாண்மைத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, ஊரக வளர்ச்சித்துறை உட்பட பல்வேறு துறைகள் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு கோடி பனை விதைகள் விதைக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, 35.00 இலட்சம் பனை விதைகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

மரக்கன்றுகளை பராமரிப்பதற்காக குளித்தலை கிராமியம் டிரஸ்டிற்கு ரூ.2.00 கோடி நிதியை பாரத ஸ்டேட் வங்கி வழங்கியுள்ளது. மரக்கன்றுகளை பராமரிப்பதற்காக இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனம் சார்பில் ரூ.ஒரு கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மரக்கன்றுகள் நடவு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் ரூ.1.60 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தில் தகுதியுள்ள நபர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளன. மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டமில்லா பயணம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதேபோல் பெண்கள் உயர்கல்வியை மேம்படுத்தும் வகையில், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 31,000 பள்ளிகளில் பயிலும் சுமார் 18.00 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். பள்ளிக் கல்வித்துறைக்கு இந்த ஆண்டு ரூ.37,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் கள்ளிமந்தையம் ஊராட்சியில் மட்டும் இதுவரை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கள்ளிமந்தையத்தில் அரசு கல்லூரிக்கான கட்டடம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் நிறைவுபெற்று விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும், என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இடையக்கோட்டை ஊராட்சியில், உலக சாதனையாக 4 மணி நேரத்தில் 6 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்ட இடத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, போடுவார்பட்டி ஊராட்சி, மஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, சத்தரப்பட்டி ஊராட்சி ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி மு. அய்யம்மாள், திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா. பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர்(வணிக வாடிக்கையாளர்கள் குழுமம்) ஆர். ஆனந்தகணேசன், பாரத ஸ்டேட் வங்கி பொதுமேலாளர்(விரிவாக்கம்2) கோவிந்த் நாராயண் கோயல், இந்தியன் ஆயில் கார்பரேசன் நிறுவன பொதுமேலாளர் ராஜேந்திரா, மேலாளர்கள் தயேந்திரா, நஷிம் பாஜ், சரவணன், நிகிட், சுமித் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினரின்

# 250 இலக்குகள் தாக்கி அழிப்பு:இஸ்ரேல் அதிரடி!

டெல் அவில், டிச. 14 – இரு நாடுகளுக்கு இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தத்தின்போது பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்தும், பதிலுக்கு பணய கைதிகள் விடு விக்கப்பட்டும் வந்தனர். போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின்னர், மீண்டும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரர்கள் கடந்த 24 மணி நேரத்தில் நிலம், கடல் மற்றும் வான் வழியே ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினரின் 250 இலக்குகளை தாக்கி அழித்தனர். இஸ்ரேல் எல்லையை நோக்கி ராக்கெட்டுகளை ஏவுவதற்காக வந்து கொண்டிருந்த பயங்கரவாத குழு ஒன்றை, வழியிலேயே வைத்து தாக்குதல் நடத்தி ஒழித்து விட்டோம் என்றும் படையினர் தெரிவித்தனர்.

இதற்காக, பெரிய வகை துப்பாக்கிகள், கவச வாகனங்கள் உள்ளிட்ட ஒன்றிணைந்த ஆயுதங்கள் கொண்ட படையினர், எல்லை காவல் படையினருடன் இணைந்து மேற்கொண்ட இந்த அதிரடி நடவடிக்கையில், சஜையா பகுதியில் பயங்கரவாத குழுவினர் அழிக்கப்பட்டனர். விமான படையை சேர்ந்த விமானம் ஒன்றை கொண்டு, அந்த பயங்கரவாத குழுவினரை அவர்கள் தாக்கி அழித்தனர்.



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றியம், குண்டுகுளத்தில் புதிய மின் மாற்றியை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் இயக்கி வைத்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன், பேரூராட்சித் தலைவர் பி.ஏ.நஜீமூதின், கூட்டுறவுசங்கத் தலைவர் சுப.தமிழரசன், ஊராட்சிமன்றத் தலைவர் நாகஜோதிசேகர், மாவட்ட விவசாய அணி பா.காளிமுத்து, பேரூராட்சி துணை தலைவர் இப்ராகிம், தாளாளர் கதர்பாட்சா, இளைஞரணி பைரோஸ்கான், முருகன், ராஜவேல், ஜெயினுலாபுதீன், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். அதன்பிறகு வண்ணாரவயல் கண்மாய் வரத்துக்கால்வாயை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ஆய்வு செய்தார். வட்டாட்சியர், பொதுப்பணித்துறை அதிகாரிகள், மின்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.